# யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

# பரிசில் நாள் – 2018

காலம் :- 30.06.2018 சனிக்கிழமை, முற்பகல் 9.00 மணி

இடம் :- கல்லூரியின் கலையரங்கம்

**தலைமை**

திரு.க.மங்களேஸ்வரன்

*(கல்லூரி முதல்வர்)*

**பிரதம விருந்தினர்**

உயர்திரு.சி.சத்தியசீலன் அவர்கள்

*(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்)*

**சிறப்பு விருந்தினர்**

உயர்திரு.அ.பிறேமதாஸ் அவர்கள்

*(பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம், தென்மராட்சிக் கல்வி வலயம்)*

**பரிசில் வழங்கல்**

திருமதி.இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்கள்

*(ஆசிரியர், யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரிச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்கள் வருகை
- மங்கல விளக்கேற்றல்
- தேவாரம், கிறிஸ்தவ கீதம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை (பிரதி அதிபர்)
- பரிசில்நாள் அறிக்கை (கல்லூரி முதல்வர்)
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்வுகள்
  - மூவிசைச் சங்கமம்
  - கிராமியக் கதம்பம்
  - சகோதரமொழிப் பாடல் (குழு)
  - ஆங்கிலமொழிப்பாடல் (குழு)
  - நாடகம் - "உன்னையே நீ அறிவாய்"
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
## பரிசில் நாள் அறிக்கை - 2018

எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய முதன்மை விருந்தினரான வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் உயர்திரு சிசத்தியசீலன் அவர்களே!

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு அ.பிறேமதாஸ் அவர்களே!

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு சு.சுந்தரசிவம் அவர்களே!

தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே! உதவிக்கல்விப் பணிப்பாளர்களே! கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! முதன்மை ஆசிரியர்களே! அயற்கல்லூரிகளின் அதிபர்களே! ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! இக்கல்லூரியின் பெருமைமிகு முன்னாள் அதிபர் ஆசிரியர்களே! மற்றும் எமது ஆசிரியர்களே! கல்விசாரா உத்தியோகத்தர்களே! மாணவச் செல்வங்களே! அனைவருக்கும் அன்பார்ந்த காலை வணக்கம். இப்பரிசில் நாளில் தங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிக்க மகிழ்வெய்துகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் விருந்தினர்கள் அனைவரையும் கரம்கூப்பி சிரம் தாழ்த்தி வருக வருகவென வரவேற்று 2018ம் ஆண்டுக்கான பரிசில் நாள் அறிக்கையை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருமதிப்புக்குரிய பிரதம விருந்தினர் அவர்களே!**

நாரந்தனையை பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் நாரந்தனை கணேசா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் முதுகலைமாணி பிராந்திய திட்டமிடல் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளீர்கள். அதனைத் தொடர்ந்து மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாக முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்று உயர் முகாமைத்துவ பதவிகளில் முத்திரை பதித்து வருகின்றீர்கள்.

அனுபவம் மிக்க நிர்வாகிகளுடன் நெருங்கிய தொடர்பினை பேணி வளர்த்து வருகின்றமையால் கட்டுப்பாடு, இரக்கம், நெகிழ்வுத்தன்மை, முன்னோடியான நடத்தை ஆகியவற்றை பணியில் இணைத்து எமது கல்விப்புலத்திற்கு அளப்பரிய பணியாற்றி வருகின்றீர்கள் என்பது யாவரும் அறிந்ததே.

1995இல் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் தோற்றி சித்தி பெற்று வவுனியா மாவட்டத்தில் உதவி பிரதேச செயலராகவும் வேறும் பல பிரிவுகளில் பிரதேச செயலராகவும் பணியாற்றியுள்ளீர்கள். 2003ம் ஆண்டு முதல் கரவெட்டி பிரதேச செயலராக கடமையாற்றிய காலத்தில் அப்பிரதேச அபிவிருத்திக்கான தங்களின் அர்ப்பணிப்பான சேவையினால் 2011ம் ஆண்டு பிரதேச செயலகங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற முடிந்தது. தங்கள் திறமையினால் 2012ம் ஆண்டு முதல் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக அரும்பணியாற்றி பின்னர் குறுகிய காலம் வேறு அமைச்சில் கடமையாற்றும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் சேவையின் தேவையை கருத்திற்கொண்டு மீண்டும் கல்விப் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பது கண்டு பெருமகிழ்வெய்துகின்றோம்.

**சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் பிர-திக்கல்விப்பணிப்பாளர் கல்வி முகாமைத்துவம் தென்மராட்சி கல்வி வலயம் திரு.அ.பிறேமதாஸ் அவர்களே!**

புதிதாக இலங்கை கல்வி நிருவாக சேவைக்குள் நுழைந்து இளமைத்துடிப்புடன் கருமமாற்றி வருவது கண்டு அகமகிழ்வெய்துகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாக மிளிரும் தாங்கள் தொடர்ந்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியினையும் பின்னர் தேசிய கல்வி நிறுவகத்தில் முதுகல்விமாணிப் பட்டத்தினையும் பெற்று வாண்மைக்கு அணிசேர்த்துள்ளீர்கள். 2005ம் ஆண்டிலே ஆசிரியத் தொழிலினை சங்கானை சிவப்பிரகாசா வித்தியாலயத்தில் ஆரம்பித்து 2012ம் ஆண்டு வரை மகத்தான பணியாற்றி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு மாற்றலாகி அங்கு 2015ம் ஆண்டு வரை சேவைபுரிந்து வளமூட்டினீர்கள்.

2015ம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாண மாவட்டம் திரும்பி மகாஜனா கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றுங்கால் இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று அக்கல்லூரியிலேயே பிரதி அதிபராக பதவியேற்று இருக்கும்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை பொது ஆளணி பரீட்சையில் சித்தியெய்தி தென்மராட்சி வலயத்தின் முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளீர்கள். இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை என்று அனைத்து சேவைகளிலும் பெற்ற அனுபவங்களின் வாயிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவாரி மதிப்பீடு மற்றும் கருத்தரங்குகள் ஊடாக எமது பாடசாலைகளை வளப்படுத்தி வழிகாட்டி வருவதால் பண்புசார் செயற்பாடுகளில் பெருவிருத்தி ஏற்பட வாய்ப்புண்டு. தங்களை வரவேற்பதில் கல்லூரிச் சமூகம் பூரிப்படைகின்றது.

**பரிசில்களை வழங்கி மாணவர்களைக் கௌரவித்து மகிழ்வித்து மேலும் கற்றல் செயற்பாடுகளில் ஊக்கத்துடன் திகழ்விப்பதற்காக வருகை தந்திருக்கும் யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்களே !**

தாங்கள் சைவசமயம், அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் உயரிய தேர்ச்சிக்கு அயராது உழைப்பதுடன் இவற்றினூடாக மாணவர்கள் சிறந்த ஒழுக்க சீலராகவும் நல்ல பிரஜைகளாகவும் திகழ்வதற்கு வழிகாட்டி வருவதையும் நாம் அறிவோம்.

## மாணவர் விபரம்

இவ் அறிக்கைக்குரிய காலப்பகுதியில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள மாணவர் எண்ணிக்கை விபரம் வருமாறு.

2017

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6-11 | 198 | 206 | 404 |
| 12-13 | 32 | 76 | 108 |
| மொத்தம் | 230 | 282 | 512 |

2018

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6-11 | 199 | 216 | 415 |
| 12-13 | 53 | 85 | 138 |
| மொத்தம் | 252 | 301 | 553 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர் விபரம்

| No | Name | Grade | Qualification | |
|---|---|---|---|---|
| 1. | MR.KANAPATHIPPILLAI MANGALESWARAN | SLPS I | B.A (Hons) | P.G.D.E, M.ED |
| 2. | MR.VAITHILINGAM MANOHARAN | SLTS I | B.ED | B.ED |
| 3. | MRS.VIMALA RAVEENDRAN | SLTS I | B.Com | P.G.D.E |
| 4. | MISS.KANDIAH SIVANESARANY | SLTS I | G.C.E A/L | Social Studies Trained |
| 5. | MR.GNANAPPIRAKASAM GNANAKUMAR | SLTS 2 I | B.A | P.G.D.E, M.ED |
| 6. | MRS.MAHESWARY GANESHAMOORTHY | SLTS I | G.C.E A/L | Home Science Trained |
| 7. | MRS.PUNITHANITHY SIVAKUMAR | SLTS 2 I | B.A | P.G.D.E |
| 8. | MISS.SUBRAMANIAM MANIVATHANI | SLTS 2 I | B.Com | P.G.D.E |
| 9. | MR.VEERAKATHTHI KUMARAVETPILLAI | SLTS I | B.A (Hons) | P.G.D.E, M.ED |
| 10. | MRS.NANTHARUBY NITHTHIYANANTHAN | SLTS I | Dip in Dance | P.G.D.E |
| 11. | MRS.KEERTHANA SASIKARAN | SLTS 2 II | B.Sc (Hons) | - |
| 12. | MR.SOMASUNTHARAM MOHANATHAS | SLTS I | HNDA | P.G.D.E |
| 13. | MR.MURUGESU THIVIYABALAN | SLTS 2 I | B.A | P.G.D.E |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | MRS.VANI KUNASINGAM | SLTS I | G.C.E A/L | Trained Art |
| 15. | MRS.SOBIGA SUTHARSHAN | SLTS 2 II | B.A | - |
| 16. | MR.SELVARAJAH KABILAN | SLTS 2 I | B.Sc | P.G.D.E, M.ED |
| 17. | MR.PARAMESWARAN KAJAKARAN | SLTS 2 II | B.Sc | P.G.D.E |
| 18. | MISS.ANN DHARSIKA MARIYAGUNARATNAM | SLTS 2 II | B.Sc (Hons) | - |
| 19. | MRS.MARYSISILIYA CHRISTY GNANARAJAH | SLTS I | G.C.E A/L | Trained Christiani-ty |
| 20. | MRS.RAHINI VIJAYARATHTHINAM | SLTS I | B.A, M.A (Tamil) | P.G.D.E, M.ED |
| 21. | MR.PONNAMPALAM SUJINTHAN | SLTS I | B.Sc | P.G.D.E |
| 22. | MRS.PUSPARANI NAGULESWARAN | SLTS I | B.F.A | - |
| 23. | MRS.THANALEDSUMY THARMAKULASINGAM | SLTS I | B.A | Trained Science, P.G.D.E |
| 24. | MR.NAGALINGAM MAYURAN | SLTS 2 II | B.ED | Dip. In.Teach (English) |
| 25. | MRS.ROHINI PARAMSOTHY | SLTS I | B.A | P.G.D.E |
| 26. | MR.OPPILAMANI VIJAYATHASAN | SLTS I | B.Sc | P.G.D.E, M.ED |
| 27. | MR.KANTHASAMY KAJENTHIRAN | SLTS 2 II | B.Com | P.G.D.E |
| 28. | MRS.THAMILCHCHELVI SIVANESAN | SLTS 2 I | B.A spl | P.G.D.E |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 29. | MRS.RAJANI THAYAPARAN | SLTS 2 I | B.A, M.A | P.G.D.E |
| 30. | MRS.INTHUJA THIVYARAJ | SLTS 2 II | G.C.E A/L | Dip. In.Teach (Library Science) |
| 31. | MRS.UMA VISHNUTHASAN | SLTS I | B.A | P.G.D.E |
| 32. | MR.KANTHAIYAH JEYAKKUMAR | SLTS 2 II | B.A | P.G.D.E, M.ED |
| 33. | MRS.MANJULA KANNAN | SLTS 2 I | B.F.A | P.G.D.E |
| 34. | MRS.THADSHAYINI SHIVANTHAKUMAR | SLTS 2 II | G.C.E A/L | Dip. In.Teach (Hinduism) |
| 35. | MRS. KALAIVANI GOBALARAJAH | SLTS 3 I | B.Sc (Hons) | - |
| 36. | MR.KALAINESAN SHABESHAN | SLTS 3 I | B.Sc | - |
| 37. | MR.SUBRAMANIAM SRIRANGAN | SLTS I | B.ED | Trained Science |
| 38. | MR. PAAKKIYANATHAN SASEEVAN | SLTS 2 II | G.C.E A/L | Dip. In.Teach (Maths) |
| 39. | MR.THURAISINGAM KUMARANATHAN | SLTS 2 II | B.F.A | P.G.D.E |
| 40. | MRS.SUBANTHINI VIJAYAKUMARAN | SLTS 2 I | G.C.E A/L | Trained Science |

## அறிக்கைக்குரிய காலப்பகுதியில் புதிதாக இணைந்தோர்

திரு.க.ஜெயக்குமார்

திருமதி.ம.கண்ணன்

திருமதி.தா.சிவந்தகுமார்

திருமதி.க.கோபாலராஜா

திரு.க.சபேசன்

திரு.சு.ஸ்ரீரங்கன்

திரு.பா.சசீவன்

திரு.து.குமரநாதன் (பகுதி நேரம்)

திருமதி.சு.விஜயகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள்

திரு.கு.ரவீந்திரா (அதிபர்)
திரு.மா.கேசவன்
திரு.க.சந்திரமௌலீசன்
திருமதி.கோ.ரவீந்திரன்
திருமதி.ப.குகஆனந்தன்
திருமதி.க.கண்ணதாஸ்

## பதவி உயர்வு

எமது கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றிய திரு.ச.அகிலன் அவர்கள் 15.02.2018 ஆம் திகதி முதல் யா/கரம்பை அ.மி.த.க பாடசாலையின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். குறுகிய காலத்தில் அளப்பரிய பணியாற்றி உயர்வடைந்துள்ளமையை இட்டு அகமகிழ்வெய்தி வாழ்த்துகின்றோம்.

## ஓய்வு

எமது கல்லூரியில் 01.03.1990 ஆம் ஆண்டு முதல் சுமார் 27 வருடங்களாக ஆசிரியையாக பகுதித்தலைவராக கடமையாற்றிய திருமதி.யோகேஸ்வரி லங்கேசன் அவர்கள் 14.03.2017 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றுள்ளார். இவரது ஓய்வு காலம் சிறப்புற வாழ்த்துவதுடன் கல்லூரி நூலகத்திற்கு 50,000/= ரூபா பெறுமதியான தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியமையை இட்டு நன்றி பகர்கின்றோம்.

## துணை ஆளணியினர்

கல்லூரியின் அன்றாட செயற்பாடுகளின் வெற்றிக்கு துணை ஆளணியினரின் பங்களிப்பு முக்கியமானது. அந்த வகையில் பின்வரும் ஆளணியினர் அர்ப்பணிப்புடன் சேவை புரிகின்றனர்.

திரு.சி.ஞானபாஸ்கரன்
திரு.ச.விஜயரெத்தினம்
திருமதி.சி.ரேவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப் பெறுபேறுகள்

எமது கல்லூரியின் க.பொ.த (சா.த) பெறுபேறுகளின்படி 2016, 2017 ஆம் ஆண்டிற்குரிய பாட ரீதியான சித்திவீதம் வருமாறு.

| *பாடம்* | *2016* | *2017* |
|---|---|---|
| சைவநெறி | 92 | 89 |
| கத்தோலிக்கம் | 100 | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 79 | 87 |
| ஆங்கிலம் | 16 | 35 |
| கணிதம் | 51 | 49 |
| விஞ்ஞானம் | 53 | 74 |
| வரலாறு | 70 | 69 |
| வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் | 94 | 100 |
| புவியியல் | 92 | 93 |
| குடியுரிமைக்கல்வி | 44 | 56 |
| கர்நாடக சங்கீதம் | 100 | 83 |
| சித்திரம் | 100 | 100 |
| நடனம் | 100 | 100 |
| தமிழ் இலக்கியம் | 100 | 85 |
| ஆங்கில இலக்கியம் | - | 67 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 76 | 100 |
| உணவும் விவசாயத் தொழில்நுட்பமும் | 57 | 76 |
| மனைப்பொருளியல் | 33 | 86 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 57 | 95 |

| ஆண்டு | தோற்றியோர் | க.பொ.த(உ.த) | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2016 | 57 | 27 | 47% |
| 2017 | 55 | 27 | 49% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த (சா.த) பரீட்சை – 2017

### சிறந்த பெறுபேறு

| | |
|---|---|
| ஸ்ரீ.வினுஜா | 9A |
| இ.கேதுஷா | 8A, B |
| பா.கிந்துசன் | 8A, C |
| ஸ்.றொக்சிற்றா | 8A, C |
| ப.கனிஸ்த்தா | 7A, B, C |
| ச.சஜீவன் | 6A, 2B, C |
| ம.தனுசா | 6A, B, 2C |
| த.சர்மிகா | 5A, 3B, C |
| சு.ஜிவிதர்சன் | 5A, 2B, C, S |
| நே.கம்சியன் | 4A, 5B |
| மோ.தனுசிகா | 4A, 2B, 3C |
| ஐ.சயந்தினி | 4A, 2B, C, 2S |
| அ.சிலக்சனா | 2A, 4B, 3C |

### க.பொ.த (உ.த) பரீட்சை

| ஆண்டு | தோற்றியோர் | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2016 | 40 | 21 | 53% |
| 2017 | 23 | 19 | 83% |

### க.பொ.த (உ.த) – 2017

**வணிகம்**

1. சி.சிறிகௌசி 3A
2. ச.கோபிகா A, 2B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலை**

| | |
|---|---|
| க.தமிழரசி | 3A |
| கு.மேரிசிந்துஜா | 3A |
| த.தரங்கினி | A, 2B |
| ச.துசாயினி | A, B, C |

**2014 இலிருந்து 2016 வரை பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் சென்றோர் விபரம்**

2014

உ.ஜெனுசன்

ப.சலித்திகா

க.கலைவாணி

ச.தயாளினி

செ.பவித்திரா

2015

ப.நிதர்சினி

சி.யசினா

ந.கோபினி

தி.சுயஸ்னா

யூ.றொசானி

ந.ஜெயரூபி

சி.இந்துஷா

2016

ச.தர்மினி

த.விஜயமாலினி

உ.டெனுசிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள்

கல்லூரியின் 2018 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வன்மைப்போட்டி 23.01.2018 ஆம் திகதி நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராக இக் கல்லூரியின் பழைய மாணவனும் பல் வைத்திய நிபுணருமாகிய டாக்டர் திரு.ஞா.வைகுந்தன் கலந்து சிறப்பித்திருந்தார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி.கி.பிரதீபா அவர்கள் பங்குபற்றியிருந்தமை சிறப்பானது. வள்ளுவர் இல்லம் வெற்றி பெற்று வெற்றிக்கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது.

## வலய மெய்வன்மைப் போட்டிகள்

2018 ஆம் ஆண்டிற்கான வலய நிலை மெய்வன்மைப் போட்டிகளில் 7 அஞ்சல் நிகழ்வுகள் உள்ளடங்கலாக 43 போட்டிகளில் வெற்றி பெற்று வலய நிலையில் 3ஆம் இடம் பிடித்துள்ளோம். இவர்கள் மாகாண நிலைப் போட்டிகளில் கலந்துகொள்ள தகைமை பெற்றுள்ளனர். இவ் வீரர்களும், வீராங்கனைகளும் தேசிய நிலை வரை முன்னேறி சாதனை படைக்க வாழ்த்துகின்றோம்.

## பெருவிளையாட்டுக்கள்

2017ஆம் ஆண்டில் வலய நிலைப் பெருவிளையாட்டுக்களில் 5 போட்டிகளில் மாத்திரமே வெற்றிபெற்றிருந்த நிலையில் இவ்வாண்டில் 15 போட்டிகளில் வெற்றியீட்டி மாகாண நிலைப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தமை சிறப்பானதாகும். அவ் அணிகளின் விபரம் வருமாறு.

**வலைப்பந்து**

16 வயது பெண் - 2 ஆம் இடம்

18 வயது பெண் - 2 ஆம் இடம்

20 வயது பெண் - 1 ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரப்பந்து**

16 வயது ஆண் - 1 ஆம் இடம்

20 வயது ஆண் - 2 ஆம் இடம்

18 வயது பெண் - 2 ஆம் இடம்

20 வயது பெண் - 1 ஆம் இடம்

**கரம்**

20 வயது ஆண் - 1 ஆம் இடம்

20 வயது பெண் - 1 ஆம் இடம்

**சதுரங்கம்**

20 வயது ஆண் - 3 ஆம் இடம்

20 வயது பெண் - 1 ஆம் இடம்

**பூப்பந்து**

16 வயது ஆண் - 3 ஆம் இடம்

20 வயது ஆண் - 2 ஆம் இடம்

20 வயது பெண் - 2 ஆம் இடம்

**கடற்கரை கரப்பந்து**

20 வயது பெண் - 2 ஆம் இடம்

## தமிழ்மொழித்திறன் போட்டிகள்

2018 இல் நடைபெற்ற வலய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் எமது கல்லூரி 7 முதலிடங்களையும் 5 இரண்டாமிடங்களையும் 3 மூன்றாமிடங்களையும் பெற்றுக்கொண்டது. இவற்றில் முதலாமிடம் பெற்ற போட்டிகள் மாவட்ட மட்டப்போட்டிக்குத் தகைமை பெற்றுள்ளன. 2016 ஆம் ஆண்டில் செல்வி.பீலிஸ் குணசீலன் மேரி சிந்துஜா எனும் மாணவி கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும் போட்டியில் தேசிய நிலையில் 2 ஆம் இடமும் 2017 ஆம் ஆண்டில் செல்வி.சந்திரநாதன் காயத்திரி எனும் மாணவி சிறுகதைப் போட்டியில் தேசிய நிலையில் 1 ஆம் இடமும் பெற்று பாடசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை சேர்த்துள்ளனர். இவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியை திருமதி.இராகினி விஜயரத்தினம் அவர்களையும் பாராட்டுகின்றோம். இவ்வாண்டில் தரம் 10 வகுப்பைச் சேர்ந்த செல்வி ற.பிரயுந்தா என்பவர் பா ஓதுதல் போட்டியில் மாகாண நிலையில் 3 ஆம் இடம் பெற்றுள்ளார். மாணவிக்கும் நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி.தமிழ்ச்செல்வி சிவநேசன் அவர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

## ஆங்கில தினப் போட்டிகள்

2018 இல் நடைபெற்ற வலய மட்ட ஆங்கில தினப் போட்டியில் 5 இடங்கள் கிடைக்கப்பெற்றன. 2017 இல் தரம் 11 வகுப்பைச் சேர்ந்த மாணவன் செல்வன்.பா.கிந்துசன் என்பவர் Recitation போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவானார். இவரைப் பாராட்டுவதுடன் நெறிப்படுத்திய ஆசிரியர் திரு.நாகலிங்கம் மயூரன் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

உலகமயமாக்கலின் விளைவுகளை எமது சிறார்களும் அனுபவித்து பயன்பெற வேண்டும் எனும் நோக்கில் பிரித்தானிய கழகத்தால் (British Council) முன்னெடுக்கப்படும் "சர்வதேச பாடசாலை விருது வழங்கல் (International School Award)" எனும் செயற்றிட்டத்தில் எமது கல்லூரியையும் இணைத்து அதில் வெற்றிக்கான தகைமையை ஈட்டி கடந்த 23.06.2018 அன்று கொழும்பு கில்டன் வதிவகத்தில் விருதினைப் பெற்றுள்ளோம். வெற்றிக்காக உழைத்த திருமதி.இந்துஜா திவ்யராஜ், செல்வி.மரிய குணரட்ணம் ஆன் டர்சிகா ஆகியோரைப் பாராட்டுவதில் மகிழ்வெய்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக விஞ்ஞானப்போட்டி

2017 இல் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் வலய, மாகாண, மாவட்ட போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளோர் விபரம் வருமாறு.

தரம் 6 பு.காவியா வலயநிலை 1 ஆம் இடம்

தரம் 7 ச.ஜெனார்த்தனி வலயநிலை 3 ஆம் இடம்

தரம் 7 சு.தினுஜன் அகில இலங்கை 3 ஆம் இடம்

தரம் 13 க.தமிழரசி தேசிய நிலை 3 ஆம் இடம்

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். தேசிய நிலை வெற்றிக்கு உழைத்த ஆசிரியை திருமதி.ரோகினி பரம்சோதி அவர்களுக்கு சிறப்பான பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

## சமயப்போட்டிகள்

மாணவர்களின் சமய விழுமியங்களை வளர்த்தெடுக்கும் முகமாக பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்படுவதுடன் வலயமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றனர். 2018 ஆம் ஆண்டில் வலயமட்டத்தில்

தரம் 13 செல்வி.சு.பிரியந்தினி கோலப்போட்டி 1 ஆம் இடம்

தரம் 10 செல்வன்.ச.லிகிதரன் தோரணம் பின்னல் 1 ஆம் இடம்

தரம் 7 செல்வி.செ.கவிப்பிரியா மாலை கட்டுதல் 3 ஆம் இடம்

வெற்றியீட்டினர். இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிக, மனைப்பொருளியல் மற்றும் கைவினைப் போட்டிகள்

கல்லூரி மாணவர்களின் பன்முக ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் 2017 ஆம் ஆண்டில்,

தரம் 10 இ.நிலோஜிதா வணிக குறுவினாப்போட்டி வலயம் 3 ஆம் இடம்

தரம் 13 பு.பிரதீபா வணிக பேச்சுப்போட்டி வலயம் 2 ஆம் இடம்

தரம் 11 ஐ.சயந்தினி மனைப்பொருளியல் அறிவை அளத்தல் போட்டி வலயம் 1 ஆம் இடம்

இவ் வெற்றியாளர்களையும் பொறுப்பாசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

இவ்வாண்டின் தேசிய அருங்கலைகள் பேரவையினால் நடாத்தப்பட்ட கைவினைப் போட்டியில் வி.கரிகரன் எனும் மாணவன் கடவுளர் ஆக்கம் எனும் ஆக்கத்திறனை ஆக்கி மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திலும் காட்சிப்படுத்தப்பட்டது. இவருக்கும் பொறுப்பாசிரியை திருமதி.ம.கணேசமூர்த்தி அவர்களுக்கும் பார்ராட்டுக்கள்.

## சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மேற்படி திட்டத்தின் கீழ் எமது கல்லூரியைச் சேர்ந்த பதினொரு மாணவர்கள் அதிவிசேட தரத்தில் சித்தியெய்தி பச்சை வர்ணப் பதக்கம் வரை ஈட்டியுள்ளனர். செல்வி.ச.சோபனா, செல்வி.லோ.மகிஷாயினி, செல்வி.க.துவாரகா, செல்வி.ச.ஜனார்த்தனி, செல்வி.ச.சங்கீர்ணா, செல்வி.ஹ.டகிதா, செல்வி.இ.தஜீகா, செல்வி.ச.றம்ஜா செல்வன்.சோ.தஜீ, செல்வன்.த.தினுஜன் மற்றும் செல்வன்.சி.கலாபவன் ஆகியோராவார். இவர்களை நெறிப்படுத்தும் ஆசிரியை திருமதி.க.கோபாலராஜா அவர்களும் பாராட்டுக்குரியவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மன்றங்கள்

கல்லூரி மாணவர்களின் பல்வேறு ஆளுமை விருத்தியையும் படைப்பாற்றலையும் முழுமைப்படுத்தும் வகையில் பல மன்றங்கள் இயங்கி வருகின்றன. தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்து மன்றம், கணித விஞ்ஞான மன்றம், உயர்தர மன்றம் என்பன சிறப்புற செயலாற்றி வருகின்றன.

## ஆசிரிய ஒன்றியம்

கல்லூரியின் ஆசிரியர் நலன் பேணும் அமைப்பாக அவர்களிடையே அந்நியோன்னிய உறவை வலுப்படுத்தி அதனூடாக வினைத்திறனுடனான கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆசிரிய ஒன்றியம் அரும்பணி ஆற்றி வருகின்றது. ஆசிரியர்களின் சேவை நலன்களைப் பாராட்டுவதிலும் சுக துக்கங்களில் கலந்துகொள்வதிலும் கல்லூரித் தேவைகளை நிறைவு செய்வதிலும் ஆசிரிய ஒன்றியம் ஆற்றிவரும் பங்கு பாராட்டுதற்குரியது.

## மாணவ முதல்வர் சபை

மாணவர்களது ஒழுக்கத்தையும் பாடசாலைக் கவின் நிலையையும் மேம்படுத்தும் பொருட்டு மாணவ முதல்வர் சபையானது கல்லூரியின் ஒழுக்காற்றுக் குழுவின் சீர்மிய வழிநடத்தலில் செயலாற்றி வருகின்றது.

## சாரணியம்

மாணவர்களது ஒழுக்கம், கட்டுப்பாடு, பொறுப்புணர்வு, தலைமைத்துவம் என்பவற்றை வளர்க்கும் நோக்கில் சாரணிய அணியினர் முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். அயலில் அமைந்துள்ள ஆலய உற்சவங்களில் பணிக்கு அமர்த்தப்பட்டு நற்பெயரைப் பெற்று வருகின்றனர். பொறுப்பாசிரியர் திரு.துரைசிங்கம் குமரநாதன் அவர்களைப் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைப் பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வினைத்திறனுடன் பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உரமூட்டி நிற்கின்றது. இது பாடசாலையின் பௌதீக வளத் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் பூர்த்திசெய்து வருவது மகிழ்வூட்டுகின்றது.

இச் சங்கத்தின் அனுசரணையுடன் கலையரங்கிற்கு மட்டக் கூரைத்தகடு இடப்பட்டு மின்விளக்குகள் காற்றாடிகள் பொருத்தப்பட்டு அழகூட்டப்பட்டது. அதற்கும் மேலாக பிரான்ஸ் வாழ் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து 18 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன சிற்றுண்டிச்சாலை ஒன்றினை அமைத்து நல்கியுள்ளனர்.

எமது கல்லூரியின் பழைய மாணவனும் சிறந்த விளையாட்டு வீரனுமாகிய திரு.ம.ஸ்ரீதாஸன் அவர்கள் வருடந்தோறும் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்குரிய அனுசரணையாளராக இருந்து சிறப்பித்து வருகின்றார். இவர் 2017 ஆம் ஆண்டில் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடாத்தப்பட்ட தடகளப்போட்டியில் பதக்கம் வென்ற எமது பாடசாலையின் 9 வீர வீராங்கனைகளுக்கு மெய்வல்லுநர் பாதணிகளை வழங்கியதுடன் பெருவிளையாட்டுக்களில் பங்குபற்றும் ஆண்களுக்கான 36 விளையாட்டுச் சீருடைகளையும் வழங்கி உதவியுள்ளார். அத்துடன் க.பொ.த (உ.த) பரீட்சையில் 3A தர சித்தி பெற்ற மூன்று மாணவியர்களுக்கும் நிதி அன்பளிப்புக்களையும் வழங்கி கௌரவித்துள்ளார். கடந்த வருடங்களிலும் தேசிய மட்டத்தில் பங்குபற்றிய மற்றும் பரிசில் பெற்ற மாணவியர் இருவருக்கும் துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவன் திரு.த.மிதுனாளன் சிறுகதையாக்கத்தில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவிக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளார். அவ்வாறே பழைய மாணவன் திரு.சு.றமேஸ் ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்றையும் திரு.சி.துலக்ஸன் உயரம் பாய்தல் குறுக்குக்கம்பம் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். காலத்துக்குக்காலம் எமது கோரிக்கைக்கு இணங்க கற்றல் உபகரணங்களையும் பழைய மாணவர் சங்கம் உதவி வருகின்றது. இவ்வருடம் எமது பாடசாலை வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட வீராங்கனைகளுக்கான 36 சீருடைகளை வழங்கி உதவியுள்ளனர்.

இந்த வகையில் கல்லூரிக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையே இணைப்பாளராக இருந்து அரும்பணியாற்றி வரும் பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.ம.சசிகரன் அவர்களின் சேவை போற்றுதற்குரியதாகும்.

## தேவைகள்

எமது கல்லூரியின் நிலம் போதுமானதல்ல. இதனால் மைதானத் தேவைக்காக அருகில் அமர்ந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் முருகன் ஆலயத்துக்கு உரித்தான நிலத்தின் ஒரு பகுதியை பயன்படுத்தி வருகின்றோம். இதற்கு அனுமதியளித்திருக்கும் தர்மகர்த்தா சபையினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். எனினும் கல்லூரியுடன் இணைந்த வகையில் நிலத்தை விரிவாக்கம் செய்யக்கூடிய நிலைமை காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு 20 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக தெரிவுப் பாடங்களை நடாத்துவதற்குரிய வகுப்பறைகள் மற்றும் உயர் மட்டக் கற்றல் வள நிலையங்களும் அவசிய தேவைகளாகும். தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உயர்தரத்தில் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் இங்கு மட்டுமே காணப்படுகின்றன. எனினும் வசதி வாய்ப்புக்கள் நிறைவானதாக இல்லை. 8 வகுப்பறைகள் மட்டுமே கற்றல் செயற்பாடுகளுக்கு ஓரளவு திருப்திகரமானதாக உள்ளது. ஏனைய வகுப்பறைகள் தற்காலிக கொட்டகைகளிலும், மேடையிலும், மண்டபங்களிலுமே காணப்படுகின்றன. நிலத்தின் அருமை கருதி மாடிக் கட்டடத் தொகுதியினிலே குறைந்தது 12 வகுப்பறைகள் அமைக்கப்பட வேண்டும்.

எமது கல்லூரி தென்மராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள 1AB தரப் பாடசாலையாக உள்ளபோதும் நவீன வசதிகளுள்ள கலையரங்கு இல்லாமையால் மாணவர்கள் ஒன்றுகூடலின்போது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இத் தேவை நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

க.பொ.த (உ.த) கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பிரிவுகள் இருந்தபோதிலும் ஆய்வுகூட உதவியாளர் எவருமே நியமிக்கப்படவில்லை. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மேலும் அலுவலக சிற்றூழியர் ஒருவரும் உடனடித் தேவையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

பல்வேறு பொறுப்பான பணிகளின் மத்தியிலும் எமது அன்பான அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராக வருகைதந்திருக்கும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராகிய தாங்கள் பெறுமதிமிக்க பரிசில் நாள் உரையை நிகழ்த்தி பரிசளித்து உதவ வந்தமை எமக்கு மகிழ்வூட்டுகின்றது. தங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

கௌரவ விருந்தினராக கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக்கல்விப்பணப்பாளர் திரு.அ.பிறேமதாஸ் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வாழ்த்துவதற்காக வந்திருக்கும் ஆசிரியை திருமதி. இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்களுக்கும் நன்றிகள்.

இப்பிரதேசத்தில் கல்விப்பணியாற்றி வரும் மதிப்பார்ந்த வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், யாவருக்கும் நன்றிகூற கடமைப் பட்டுள்ளோம். மேலும் இக்கல்லூரியின் உயர்ச்சிக்காக அரும் பாடுபட்டு உழைத்த முன்னாள் அதிபர்கள், அயற்கல்லூரிகளின் அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இப்பரிசில் நாள் வைபவம் நிறைவாக நடைபெற அர்ப்பணிப்புடன் செயலாற்றிய பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஆளணியினர், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

நிறைவாக இங்கு வந்திருக்கும் எல்லோருக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J/KODIKAMAM THIRUNAVUKKARASU CENTRAL COLLEGE
## Prize List - 2018

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 1. | U.Nives | 6 | Geography, P.T.S, Civics |
| 2. | K.Thirukkumaran | 6 | Aesthetics, Civics |
| 3. | U.Kabilan | 6 | Tamil, English, Science, History, Geography, Civics, General Proficiency |
| 4. | S.Sathuryan | 6 | English, Science, History, Geography, P.T.S, |
| 5. | L.Kajanan | 6 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, Civics, General Proficiency |
| 6. | K.Kajan | 6 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, Health Science, Civics, General Proficiency |
| 7. | S.Arnikan | 6 | Maths, Science, P.T.S, Civics |
| 8. | T.Danujan | 6 | Aesthetics |
| 9. | A.Robinsan | 6 | Aesthetics |
| 10. | I.Thilruksan | 6 | Tamil, Maths, Science, Geography, Aesthetics, Civics, General Proficiency |
| 11. | T.Bonuja | 6 | Science, Geography, Aesthetics |
| 12. | I.Santhiya | 6 | Tamil, Maths, Science, History, Geography, Aesthetics, Civics, General Proficiency |
| 13. | P.Vaishnavi | 6 | Religion |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 14. | J.Thulasika | 6 | Religion |
| 15. | S.Jeniththa | 6 | Aesthetics, Civics |
| 16. | S.Grece Shebina | 6 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 17. | T.Najenthiny | 6 | Tamil, Civics |
| 18. | P.Kaviya | 6 | Religion, Tamil, Maths ,English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency,<br>2017 - Social Science Competition Zonal Level 1st Place<br>2018 - Tamil Day Competition Zonal Level 1st Place |
| 19. | P.Pavinaya | 6 | Science, Aesthetics |
| 20. | V.Jerusha | 6 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 21. | S.Sujeenthini | 6 | Aesthetics |
| 22. | S.Thinujan | 7 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 23. | S.Kalabavan | 7 | Tamil, English |
| 24. | S.Thajee | 7 | Religion, Tamil, History, Aesthetics, P.T.S, Health Science |
| 25. | J.Janushan | 7 | Tamil, Civics |
| 26. | S.Vithushan | 7 | Tamil, Civics |
| 27. | N.Tishanthan | 7 | Tamil, Aesthetics, Health Science, Civics |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 28. | S.Sobana | 7 | Aesthetics, Health Science, Civics |
| 29. | S.Kethika | 7 | Health Science, Civics |
| 30. | S.Denuja | 7 | History, Aesthetics |
| 31. | S.Sulosana | 7 | History |
| 32. | S.Sankeerna | 7 | Aesthetics, P.T.S, Health Science, Civics |
| 33. | K.Thuvaraka | 7 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 34. | I.Sakeetha | 7 | Aesthetics |
| 35. | K.Veliny | 7 | Tamil, English, Aesthetics, Civics |
| 36. | L.Mahishajiny | 7 | Tamil, Maths, English, History, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 37. | S.Jesinthiny | 7 | Civics |
| 38. | S.Janarththany | 7 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 39. | S.Sobitha | 7 | Tamil, Aesthetics, Civics |
| 40. | V.Dakitha | 7 | Religion, Tamil, English, Science, History, Aesthetics, Civics, General Proficiency |
| 41. | I.Thajeeka | 7 | Religion, Tamil, Maths, English, Science, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 42. | S.Rishanth | 8 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 43. | T.Akash | 8 | Tamil, Maths, Science, Geography, Aesthetics, P.T.S, Civics |
| 44. | J.Senthan | 8 | Religion, Tamil, Geography, Aesthetics, Civics |
| 45. | S.Janusikan | 8 | Religion, Tamil, English, Science, Geography, Health Science, Civics |
| 46. | T.Kuinsan | 8 | Civics |
| 47. | S.Pakeerathan | 8 | Religion, Tamil, Science, Geography, Health Science, Civics |
| 48. | V.Thanush | 8 | Science, Geography, Aesthetics, Civics |
| 49. | S.Kopiraj | 8 | Science, Geography |
| 50. | T.Arththikan | 8 | Tamil, Science, History, Geography, Health Science, Civics |
| 51. | P.Kirishanth | 8 | Religion, Tamil, Science, History, Geography, Aesthetics, Civics |
| 52. | T.Sujeepan | 8 | Tamil, Maths, Science, History, Geography, Aesthetics, Health Science, Civics, General Proficiency |
| 53. | I.Dilshan | 8 | Geography; Civics |
| 54. | S.Rishana | 8 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 55. | V.Kirisha | 8 | Religion, Tamil, Science, History, Geography, Aesthetics, Health Science, Civics, General Proficiency |
| 56. | V.Kamshi | 8 | Religion, Tamil, Maths, English, Science, Geography, Aesthetics, Health Science, Civics, General Proficiency |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 57. | I.Mathura | 8 | Religion, Tamil, Geography, Health Science, Civics |
| 58. | V.Vithusha | 8 | Civics |
| 59. | T.Kajenthiny | 8 | Geography, Aesthetics, Civics |
| 60. | L.Kajani | 8 | Religion, Tamil, English, Science, History, Geography, Aesthetics, Health Science, Civics, General Proficiency |
| 61. | I.Subitha | 8 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 62. | S.Sinthuja | 8 | Civics |
| 63. | J.Ukarnja | 8 | Civics |
| 64. | N.Powrththika | 8 | Civics |
| 65. | P.Kirisha | 8 | Geography |
| 66. | S.Abinaya | 8 | History, Geography, Civics |
| 67. | M.Tharsika | 8 | Religion, Tamil, Maths, English, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency<br>2018 - ICT Online Quiz Competition Zonal Level 1st Place |
| 68. | R.Sinthuri | 8 | Religion, Tamil, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 69. | M.Mathusha | 8 | Tamil, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics |
| 70. | J.Nithusha | 8 | Religion, Tamil, Science, History, Geography, Health Science, Civics |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 71. | V.James | 9 | Tamil, Science, Health Science |
| 72. | P.Ajith | 9 | Religion, Tamil, Maths, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 73. | S.Thushan | 9 | Health Science<br>2018 - 110m Hurdles Zonal Level 1st Place |
| 74. | T.Pakinthan | 9 | Religion, Tamil, Science, History, Geography, P.T.S, Health Science, Civics |
| 75. | V.Karikaran | 9 | Health Science |
| 76. | S.Likitharan | 9 | 2018 - Making 'Thoranam' Zonal Level 1st Place |
| 77. | S.Piratheepa | 9 | Religion, Tamil, Maths, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency |
| 78. | M.Pirakajini | 9 | Religion, P.T.S, Health Science |
| 79. | P.Veni | 9 | P.T.S, Health Science |
| 80. | R.Pukalini | 9 | Religion, Tamil, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics |
| 81. | A.Pelseena | 9 | Religion, Tamil, Geography, Health Science |
| 82. | N.Pirauntha | 9 | Aesthetics |
| 83. | S.Thanusha | 9 | 2018 - Discus Throw Zonal Level 1st Place |
| 84. | M.Pemaha | 9 | Religion, Tamil, Science, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics |
| 85. | K.Vikisana | 9 | Religion, Science, Aesthetics, Geography, P.T.S, Health Science, Civics |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 86. | P.Jasinthiny | 9 | Religion, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics |
| 87. | S.Lishthiga | 9 | Religion, English, Science, Geography, P.T.S, Health Science, Civics |
| 88. | U.Piratheena | 9 | Religion, Aesthetics, Geography, P.T.S |
| 89. | U.Piratheesa | 9 | Religion, Tamil, Science, History, Geography, Aesthetics, P.T.S, Health Science, Civics, General Proficiency<br>2017 - Tamil Day Competition Speech Zonal Level 1st Place |
| 90. | T.Vithursan | 10 | Religion, Maths, Science, History, Commerce, Music, ICT |
| 91. | U.Sinthujan | 10 | Religion, Tamil, Science, History, Commerce, Tamil Literature, ICT, General Proficiency |
| 92. | N.Navajeevan | 10 | Religion, science, History, Art |
| 93. | S.Sabesh Kumar | 10 | Religion, Tamil, Science, History, Civics<br>2018 - Agriculture Quiz Competition Zonal Level 1st Place |
| 94. | K.Thamilchelvan | 10 | 2016 - Innovative Competition Zonal Level 1st Place |
| 95. | S.Karvannan | 10 | Tamil Literature, Agriculture |
| 96. | S.Silusan | 10 | 2017- 300m Hurdles Zonal Level 1st Place |
| 97. | I.Nilogitha | 10 | Religion, Tamil, Science, History, English, Commerce, Tamil Literature, ICT, General Proficiency<br>2016 - Science Quiz Competition Zonal Level 1st Place |
| 98. | I.Tharanja | 10 | Religion, Tamil, Science, History, Commerce, Tamil Literature |
| 99. | T.Sajeeka | 10 | Tamil Literature |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 100. | N.Thurka | 10 | Tamil Literature |
| 101. | S.Kavitha | 10 | Tamil, Tamil Literature<br>2018 - Tamil Day Competition Writing Short Story Zonal Level 1st Place |
| 102 | K.Thusaliny | 10 | Tamil, Music, Civics . |
| 103. | P.Kojiny | 10 | Religion |
| 104. | V.Mary Shaliny | 10 | 2018 - Tamil Day Competition Writing Poem Competition Zonal Level 1st Place |
| 105. | N.Kenujan | 11(2016) | Maths, Science, Commerce, ICT, Religion, History |
| 106. | Y.Kajanan | 11(2016) | Maths, Tamil Literature |
| 107. | P.Vijayalayan | 11(2016) | Religion, History, Geography, Tamil literature |
| 108. | M.Patricroy | 11(2016) | Religion |
| 109. | S.Kaanushan | 11(2016) | Commerce |
| 110. | S.Sukithan | 11(2016) | History |
| 111. | K.Thamilarasan | 11(2016) | Religion, Tamil, History, Geography, Music |
| 112. | M.Kesaran | 11(2016) | 2018 - Tamil Day Competition Singing 'individual' Zonal Level 1st Place |
| 113. | T.Keerththajiny | 11(2016) | Dance, Religion<br>2016 - Tamil Day Competition Recitation Zonal Level1st Place |
| 114. | P.Sujintha | 11(2016) | Religion |
| 115. | J.Kithursika | 11(2016) | Religion |
| 116. | R.Sansika | 11(2016) | Religion, Tamil Literature |
| 117. | V.Roncy | 11(2016) | Religion |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' | Grade | Details |
|---|---|---|---|
| 118. | V.Daisy | 11(2016) | Geography |
| 119. | U.Sukirtha | 11(2016) | Religion |
| 120. | K.Subeechika | 11(2016) | Religion, Maths, History, Geography |
| 121. | S.Nivethika | 11(2016) | Religion, Geography |
| 122. | P.Dilakshana | 11(2016) | Religion, Tamil, History, Geography |
| 123. | V.Telina | 11(2016) | Religion |
| 124. | J.Majurika | 11(2016) | Religion |
| 125. | K.Dilaksana | 11(2016) | 2018 - 200m Race Zonal Level 1st Place |
| 126. | A.Thenuka | 11(2016) | 2018 - 400m Race Zonal Level 1st Place, 1500m |
| 127. | N.Kamchijan | 11(2017) | Maths, Science, English, ICT |
| 128. | P.Piravinth | 11(2017) | Tamil Literature, Health Science |
| 129. | K.Mathushan | 11(2017) | Health Science |
| 130. | S.Jivitharsan | 11(2017) | Maths, Science, History, Commerce, ICT |
| 131. | L.Dilakshan | 11(2017) | History, Health Science |
| 132. | S.Miltan | 11(2017) | Religion, History, Music |
| 133. | S.Sajeepan | 11(2017) | Religion, Science, History, Geography, Tamil |
| 134. | P.Kinthushan | 11(2017) | Religion, Tamil, Science, History, English, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 135. | S.Silakasan | 11(2017) | 2016 - 110m hurdles Zonal level 1st Place<br>2017 - 110m Hurdles Zonal level 1st Place<br>2018 - 110m hurdles Zonal Level 1st Place, Javelin Throw Zonal Level 1st Place |
| 136. | R.Kethusha | 11(2017) | Religion, Tamil, Science, History, English, Maths, Tamil Literature, ICT |
| 137. | S.Vinuja | 11(2017) | Religion, Tamil, Science, History, English, Maths, Geography, Tamil Literature, ICT |
| 138. | T.Sharmika | 11(2017) | Religion, Tamil, Science, Maths, History |
| 139. | A.Sileksana | 11(2017) | History, Geography<br>2017 - 100m Hurdles Zonal Level 1st place |
| 140. | P.Kanisththa | 11(2017) | Religion, Tamil, History, Maths, Geography, Tamil Literature, ICT |
| 141. | S.Rekkulin Rokcita | 11(2017) | Religion, Tamil, Science, History, English, Maths, Geography, ICT |
| 142. | M.Thanusha | 11(2017) | Religion, Tamil, Science, Maths, Tamil Literature, ICT |
| 143. | I.Sayanthiny | 11(2017) | Religion, Geography, Art, Home Science, 2017 - Home Economic competition Zonal Level 1st Place |
| 144. | R.Anusithra | 11(2017) | Religion, Agriculture |
| 145. | V.Pavithira | 11(2017) | Religion, Agriculture |
| 146. | M.Thanusika | 11(2017) | Religion, Tamil, Dance, Health Science |
| 147. | A.Sinthuja | 11(2017) | Religion |
| 148. | P.Sarminy | 12(2017) | History, Hindu Culture, Tamil |
| 149. | K.Thusyanthiny | 12(2017) | History, Tamil<br>2018 - Tamil Day Competition Zonal Level 1st Place |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| No | Students' Name | Grade | Details |
|---|---|---|---|
| 150. | S.Arany | 12(2017) | Tamil |
| 151. | K.Tharsika | 12(2017) | Business studies |
| 152. | S.Piryashaliny | 12(2017) | Bio Technology |
| 153. | P.Kithusana | 12(2017) | 2017 - 400m Hurdles Zonal Level 1st Place |
| 154. | S.Piriyanthiny | 12(2017) | 2018 - Making 'Kolam' Competition Zonal Level 1st Place |
| 155. | K.Kopika | 13(2017) | Accounts<br>2016 - Commerce Competition Speech Zonal Level 1st Place |
| 156. | S.Srikowsy | 13(2017) | Accounts, Economics, Business studies |
| 157. | T.Tharankiny | 13(2017) | History |
| 158. | K.Thamilarasy | 13(2017) | Geography, History, Tamil |
| 159. | P.Mary Sinthuja | 13(2017) | Political, History, Tamil |
| 160. | S.Thushajiny | 13(2017) | History |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Special Prizes

1. V.Karthikajiny

   (Provincial Level Tamil Day Competition -2015 Oratory 2nd place )

2. U.Piratheesha

   (Provincial Level Tamil Day Competition-2015 Reading 2nd Place )

3. P.Mary Sinthuja

   (Tamil Day Competition-2016 writing Composition National level 2nd Place)

4. K.Thamilarasy

   (Social Science Competition-2016 Provincial level 2nd Place , Social Science Competition 2017 All Island 1st place , National Level 3rd place)

5. P.Kinthushan

   (English day competition-2016 Recitation Provincial level 2nd Place ,2017 Recitation Provincial level 1st Place, 2018 Oratory Zonal Level 1st Place )

6. S.Thinujan

   All island Social Science Competition -2016 National Level 3rd Place)

7. S.Kayathiry

   (Tamil Day Competition- 2017 Writing Short Story National Level 1st place )

8. P. Kithushana

   (100m Hurdles-2017 District Level 1st place)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. R.Pirauntha

(Tamil Day Competition-2018 Recitation Provincial level 3rd Place)

10. V.Karikarn

(Handicraft Competition -2018 All Island 1st Place)

11. J.Jeruban

(Zonal Level Athletic Meet-2018) - Under 16 - Champion

12. S.Thusajini

(English day competition - 2016 Handwriting - Provincial level 3rd place)

## Scholarship funds for Best Achievements

### The Best Result in G.C.E (O/L)

2014

| | |
|---|---|
| 1. R.Tharsana | 6A, 2B |

2015

| | |
|---|---|
| 1. U.Sulakshan | 6A B 2C |
| 2. S.Piriyasaliny | 6A B 2C |

### Thillainadesapillai Sivakurunathan Memorial Scholarship fund

2016

| | |
|---|---|
| 1. N.Kenujan | 6A 2B C |

2017

| | |
|---|---|
| 1. S.Vinuja | 9A |
| 2. R.Kethusha | 8A B |
| 3. P.Kinthushan | 8A C |
| 4. S.Rekkulin Rokcita | 8A C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Best Results in G.C.E (A/L)

### Mr & Mrs Jeganathan Scholarship fund

### Mr. Thambu Kandaiyah Scholarship fund

| | | |
|---|---|---|
| 2014 | 1. U.Jenushan | 3A (Commerce) |
| | 2. P.Saliththika | 3A (Arts) |
| 2015 | 1. T.Vijayamaliny | A 2B (Arts) |
| 2016 | 1. S.Tharminy | A 2B (Arts) |
| 2017 | 1. S.Srikowsy | 3A (Commerce) |
| | 2. P.Mary Sinthuja | 3A (Arts) |
| | 3. K.Thamilarasy | 3A (Arts) |

## University Admission

### Kandaiyah Rajathurai Memorial Scholarship fund

2014
1. U.Jenushan
2. P.Saliththika
3. K.Kalaivani
4. S.Thayalini
5. S.Paviththira

2015
1. P.Nitharsini
2. S.Yasina
3. N.Kopini
4. T.Suyasna
5. J.Roshany
6. N.Jeyaruby
7. S.Inthusha

2016
1. S.Tharmini
2. T.Vijayamalini
3. U.Denusika



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் நாள் அன்பளிப்பு வழங்கியோர் விபரம்

| | |
|---|---|
| திரு.செ.கயிலாயர் புகையிரத நிலைய வீதி, கொடிகாமம் | 3000.00 |
| உதயம்ஸ் பான்சி கவுஸ் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் | 500.00 |
| காயத்திரி ரெக்ஸ் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் | 500.00 |
| திருமதி.புஸ்பவேணி கிருஷ்ணராஜ் கனடா | 36000.00 |
| திரு.த.இரவீந்திரன் கொடிகாமம் | 3000.00 |
| திரு.மா.மயூரன் தவசிகுளம், கொடிகாமம் | 5000.00 |
| ஆசிரியர் நலன்புரிக் கழகம் | 48000.00 |
| கொடிகாமம் தெங்கு பனம்பொருள் உற்பத்தி அபிவிருத்திச் சங்கம் | 5000.00 |
| திரு.இ.அசோகலிங்கம் (தவசிகுளம், கொடிகாமம்) | 2000.00 |
| திரு.து.சோமநாதன் (பாலாவி வடக்கு, கொடிகாமம்) | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

## பல்லவி

திருவோங்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
வாழியவே
அரிதான கலைகளை எளிதாகப் புகட்டியே அழகோடு
திகழ்ந்தாயே நீ வாழ்க

(திருவோங்கு)

## அனுபல்லவி

அன்புடன் அறிவும் அடக்கமும் ஒழுக்கமும் பண்புடன் பணிவும்
பாரினில் விளங்க
எண்டிசை புகழ எமக்கறிவூட்டும் அன்புசேர் அதிபரோடாசிரியர்
வாழ்க.

(திருவோங்கு)

## சரணம்

செந்தமிழ் விஞ்ஞானம் மனையியல் விவசாயம் சித்திரம் சங்கீதம்
சமயம் சுகாதாரம் ஆங்கிலம்
கணிதமும் சமூகக்கல்வியும் சிந்தை மகிழ்ந்திடவே தந்திடும்
தாயே வாழ்க

(திருவோங்கு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org